பக்கங்கள்:-18

காலை முரசு



முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 20 | திங்கட்கிழமை | 04.03.2024 | அதிர்வு 216



# சாந்தனின் இறுதிக்கிரியைகள் இன்று உயிரற்ற உடலைக் கண்டு கதறிய தாய்

## அண்ணனின் புகழுடலை ஆரத்தி எடுத்துப் பெற்றுக்கொண்ட தங்கை





(எஸ்.நிதர்ஷன்)

**மறைந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் (சாந்தன்) புகழுடல் யாழ். வடமராட்சி, உடுப்பிட்டியில் உள்ள அவரது சகோதரியின் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.**

06▶

### சாந்தனின் புகழுடலுக்கு

## சிவப்பு, மஞ்சள் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தினார் சிறீதரன்



ஈழத்தமிழன் சாந்தனின் புகழுடலுக்குக் கிளிநொச்சியில் நேற்றுப் பகல் இறுதி மரியாதை செலுத்தினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

இதன்போது அவர், சாந்தனின் புகழுடலுக்கு சிவப்பு, மஞ்சள் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தினார்.



அரசியல் வாதிகளின் ஊழல்களுக்குத் துணை போகும் அல்லது அதற்கு இடமளித்துப் பார்த்து நிற்கும் உயர் அதிகாரிகளுக்கு நல்ல பாடம் புகட்டும் ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

தரங்குறைந்த அல்லது மனித பாவனைக்கு உதவாத மருந்து இறக்குமதி ஊழல் தொடர்பாக சுகாதார அமைச்சின் முன்னாள் உயர் அதிகாரிகள் பலர் வரிசையாக கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

06▶







# திருகோணமலைக் கடற்கரையில் சாந்தனுக்கு நேற்று நினைவஞ்சலி

(எஸ்.கீதபொன்கலன்)

காலஞ்சென்ற சாந்தனுக்கு திருகோணமலை கடற்கரையில் நேற்று மாலை அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலை தமிழர் சமூகத்தின் ஏற்பாட்டில் வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் மற்றும் திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை பிரதி நிதிகள் இவ் அஞ்சலி நிகழ்வில் மறைந்த சாந்தனின் உருவப் படத்திற்கு விளகேற்றி மலரஞ்சலி செய்தனர்.









## சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான

# ஒன்பது கிலோ ஐஸ்டன் கொழும்பில் மூவர் கைது!

கொழும்பில் ஐஸ் போதைப் பொருள் பதுக்கி வைத்திருந்த மூன்று சந்தேக நபர்களை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது 9 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருளை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர்.

இதன் சந்தைப் பெறுமதி சுமார் பத்துக் கோடி ரூபா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கொழும்புப் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, இந்தப் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் கடத்தல் கும்பல் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில்

# 164 ஏக்கர் நிலங்களை மார்ச் 10 இல் விடுவிக்கப் படையினர் இணக்கம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எதிர் வரும் 10 ஆம் திகதி 164 ஏக்கர் நிலங்களை விடுவிக்கப் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடந்த 28, 29 ஆம் திகதிகளில் நடைபெற்ற காணி தொடர்பான நடமாடும் சேவைக்குக் காணி அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர், படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர்.

இவ்வாறு இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே 164 ஏக்கர் நிலங்களை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பலாலி கிழக்குப் பிரதேசத்தில் இருந்து 59 ஏக்கர் நிலங்கள் விடுவிக்கப்படும் அதேநேரம் கிளிநொச்சி மாவட்டத்தின் அறிவியல் நகரப் பகுதியில் 105 ஏக்கர் நிலங்கள் விடுவிக்கப்படவுள்ளன.

இந்த நிலங்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைப் படைத் தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஓட்டோ - மோ. சைக்கிள் நேருக்கு நேர் மோதல்! படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில்!!





யாழ்ப்பாணம், தாவடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.15 மணியளவில் தாவடி சந்தியில் மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களில் ஒரு லட்சம் பேருக்கு கல்விக்கு உதவித் தொகைத் திட்டம்

## பாடசாலைகள் ஊடாக விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்து



பொருளாதார நெருக்கடியில் உள்ள பாடசாலை மாணவர்கள் சுமார் ஒரு லட்சம் பேருக்குக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முதலாம் தரத்தில் இருந்து 11 ஆம் தரம் வரைக் கல்வி கற்கும் பொருளாதார நெருக்கடியில் உள்ள பாடசாலை மாணவர்கள் ஒரு லட்சம் பேருக்கு இந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத் திட்டத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் “ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டம் 2024- 2025” இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான www.facebook.com/president.fund மூலம் விண்ணப்பப் படிவம் மற்றும் அறிவுறுத்தல்களை மூன்று மொழிகளிலும் பெற முடியும்.

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 20.03.2024 ஆம் திகதிக்கு முன் மாணவர்கள் தாம் கற்கும் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலய, மாகாணக் கல்வி அலுவலகங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் கல்வி அமைச்சு விசேட சுற்றறிக்கை ஒன்றை இது தொடர்பில் வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையின் தலைமை ஆசிரியரும் தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு பொறுப்பான குழுவுக்குத் தலைமை தாங்குவார். பிராந்திய மற்றும் மாகாண கல்வி அதிகாரிகள் மேற்பார்வை செய்வர். சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு அளவு கோல்கள் கண்டிப்பாகக் கடைபிடிக்கப்பட வேண்டும். செயல்முறை முழுவதும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

இந்த முழு வேலைத் திட்டத்துக்காகவும் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 3,600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் நேரடியாக ஜனாதிபதி நிதியத்துக்கு அனுப்பப்படக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# வெலிகம தனியார் மகளிர் பாடசாலையில் நேற்றுத் திடீரெனப் பரவிய தீயால் சேதம்!



வெலிகம நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

வெலிகம நகரில் அமைந்துள்ள தனியார் மகளிர் பாடசாலை ஒன்றின் கட்டிடத்தில் நேற்றுப் பிற்பகல் தீ பரவியுள்ளதுடன், நான்கு மாடிக் கட்டடத்தின் மூன்றாவது மாடியில் இருந்த பொருள்கள் தீயினால் பலத்த சேதமடைந்துள்ளன.

தீ விபத்து ஏற்பட்ட போது, தீ விபத்து ஏற்பட்ட கட்டடத்தை ஒட்டியுள்ள இன்னொரு கட்டிடத்தில் 150 குழந்தைகள் இருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்கள் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இக்கல்லூரி மாணவர் விடுதியில் ஏற்பட்ட தீ விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்பதுடன், இந்த தீயினால் மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் மற்றும் உடைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீயை அணைக்கும் பணியில் மாத்தறை தீயணைப்புப் பிரிவினரின் உதவியும் பெறப்பட்டுள்ள. தீப் பரவலுக்கான காரணம் குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# மலையகத்துக்கு இந்தியா வழங்கிவரும் ஆதரவை ஒருபோதும் மறக்கமாட்டோம்!

## கொழும்பு - டெல்லி உறவை மேலும் வலுப்படுத்துவேன் என்கின்றார் ஜீவன்

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த காலப் பகுதியில் இலங்கை மக்களின் நலன் கருதி இந்தியா வழங்கிய ஒத்துழைப்புகளையும், மலையக மக்களுக்காக இந்தியா வழங்கி வரும் ஆதரவையும் ஒருபோதும் மறக்கமாட்டோம். கொழும்பு – டெல்லி உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு முன்னின்று செயற்படுவேன்.

– இவ்வாறு நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்திய ஒன்றிய அரசின் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இராமாயணம் சித்திரகாவியம் எனும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அயோத்தியில் ராமர் கோவில் திறக்கப்பட்டுள்ள நிலையில், இராமாயண காவியத்தின் புகழை உலகறிய செய்யும் நோக்கில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணக் கருவுக்கு அமைய, இந்திய கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நடைபெற்ற இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வில் இந்திய ஒன்றிய அரசின் இணை அமைச்சர் மீனாட்சி லேகி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரின் அழைப்பை ஏற்று சிறப்பு அதிதியாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கை – இந்திய உறவு பல நூற்றாண்டுகளாகப் பலமாகவே உள்ளது. நெருக்கடி ஏற்பட்டபோது கூட இந்தியா தான் முதலாவதாக நேசக்கரம் நீட்டியது. இதனை நாம் மறக்கமட்டோம்.

இராமாயணத்துடன் தொடர்புபட்ட முக்கியமான புனித தலங்கள் நான் பிரதிநிதித்துவப்படுத்தும், மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளன. இதன்மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பில் திட்டம் வகுத்து வருகின்றோம்.



இராமாயணம் சித்திரகாவியம் நிகழ்வு இந்தியாவுக்கு மட்டும் அல்ல, இலங்கைக்கும் மிக முக்கியம். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதற்கு நான் முன்னின்று செயற்படுவேன்.– என்றார்.

இதேவேளை, அருங்காட்சியகம் அரங்கை அமைச்சர் திறந்து வைத்தமையுடன், பட கண்காட்சியையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இந்திய ஒன்றிய அரசின் இணை அமைச்சர் மீனாட்சி லேகி, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஷேனுகா செனவிரத்ன, இலங்கையில் இருந்து அமைச்சருடன் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தராஜன், அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்ரமசிங்க, பிரத்தியேக செயலாளர் மொஹமட் காதர், இணைப்புச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சாந்தனின் புகழுடலுக்கு

# சிவப்பு, மஞ்சள் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தினார் சிறீதரன்



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த வரிசையில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரட்னாயக்கா கடைசியாகக் கைதாகியிருக்கின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்பட்ட அவர், இந்த விவகாரத்தை ஒட்டி நீதிவான் முன்னிலையில் தான் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அளிக்க விரும்புகிறார் என்று கூறியிருக்கின்றார். அதற்காக அவர் இன்று நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட இருக்கின்றார் எனவும் தெரிகின்றது.

அதற்கிடையில், இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள ஏனைய தரப்பினர் இவருடன் தொடர்புபடாத விதத்தில் நேற்றும் முன்தினமும் – வார இறுதி நாள்களில் – மஹர சிறையில் விளக்கமறியலில் அவரைத் தடுத்து வைப்பதற்கு நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார்.

வாய் மூலமாக அரசியல்வாதிகள் வழங்கும் உத்தரவுகளை சிரமேற்கொண்டு செயல்பட்ட அதிகாரிகள் கடைசியில் தங்களின் கௌரவம், சேவை, அரச பதவி நிலை எல்லாவற்றையும் இழந்து, நடுவீதியில் நிற்க வேண்டி வரும் என்பதற்கு சுகாதார அமைச்சு விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் நல்ல சான்றுகள்.

இன்று நீதிவான் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கப்போகும் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் இந்த விடயத்தில் உள்வீட்டில் நடந்த இதுபோன்ற ஏதேனும் முக்கிய ரகசியங்களை அம்பலப்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முறையற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுத்தால், சுகாதார அமைச்சின் நிலைமையை முன்னுதாரணம் காட்டி, உயரதிகாரிகள் தங்களை இனி காத்துக் கொள்வது தான் ஒரே வழி என்கிறார் மூத்த – ஓய்வு பெற்ற – ஓர் அதிகாரி.

அரசியல்வாதிகளுக்கு எதிராக நேரடியாக அப்படிப் பேசிப் பதிலளிக்கும் துணிச்சல் அரசு அதிகாரிகள் எத்தனை பேருக்கு இன்று உள்ளது என்பதுதான் கேள்வி. அப்படித் துணிச்சலாகப் பதில் சொல்லத் திராணியற்ற அதிகாரிகள், காலக்கிரமத்தில் நீதிமன்றக் கம்பிகளை எண்ண வேண்டி வரும் என்பதை புரிந்து கொள்வது நல்லது.





## சாந்தனின் இறுதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அண்ணனின் புகழுடலைத் தங்கை ஆரத்தி எடுத்துப் பெற்றுக்கொண்டமை அங்கிருந்தவர்களைக் கண்கலங்கச் செய்திருந்தது.

சாந்தனின் புகழுடல் நேற்று மாலை வீட்டுக்கு வரும்போது, "அண்ணா வாறார் என் தெய்வம் வீட்டுக்கு வருகின்றது. யாரும் அழக்கூடாது" – என்று அதன் போது உருக்கத்துடன் சகோதரி கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் கனத்த இதயத்துடன் யாரும் அழாது இருந்த நிலையில், ஓம் நமசிவாய சொல்லி ஆரத்தி எடுக்கப்பட்டது.

அதேவேளை, தன் மகனை உயிருடன் பார்க்க வேண்டும் என்று காத்திருந்த சாந்தனின் தாய் பல ஆண்டுகளுக்குப் பின் உயிரற்ற உடலைக் கண்டு கதறி அழுதார்.

சாந்தனின் புகழுடல் ஊர்தி யாழ். வடமராட்சியை நேற்று மாலை வந்தடைந்த பின்னர் தீருவிலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

வவுனியாவில் நேற்றுக் காலை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட சாந்தனின் புகழுடல் ஊர்தி, ஏ – 9 வீதி ஊடாக மாங்குளம் – கிளிநொச்சி ஊடாக நகர்ந்து அஞ்சலிக்கு வைக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் 33 வருடங்கள் சிறைத் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் சென்னை ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் கடந்த 28ஆம் திகதி காலை மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார்.

சாந்தனுடைய வருகைக்காக அவரது குடும்பத்தினர் நீண்டகாலமாகக் காத்திருந்த நிலையில் இறுதியில் சடலமாகவே அவர் வீட்டுக்கு வந்துள்ளார்.

சாந்தனின் இறுதிக்கிரியைகள், அவரது சகோதரியின் இல்லத்தில் இன்று காலை 10 மணியளவில் ஆரம்பமாகும்.

இறுதிக்கிரியைகள் நிறைவு பெற்றதும் புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டு ஊரில் உள்ள சனசமூக நிலையத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து புகழுடல் சாந்தனின் பூர்வீக இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பின் இறுதி யாத்திரை ஆரம்பமாகும்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஊடாக எள்ளங்குளம் இந்து மயானத்துக்குப் புகழுடல் எடுத்துச் செல்லப்படும்.



# மாணவரை வெயிலில் மண்டியிட வைத்த ஆசிரியரால் கொழும்பில் பெரும் சர்ச்சை!

## நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் பெற்றோர்!!

பாடசாலை ஒன்றின் மாணவரை வெயிலில் மண்டியிடும்படி தண்டனை வழங்கப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு – நாரஹறன்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் உள்ள மாணவர்களுக்கே வெயிலில் மண்டியிடும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான காணொலி தற்போது சமூக வலைத் தளங்களில் பரவி வருகின்றது.

பாடசாலை ஆசிரியை ஒருவரின் கட்டளைக்கு இணங்கவே மாணவர்கள் இவ்வாறு தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் மண்டியிடும் இடத்தில் தண்டனை வழங்கிய ஆசிரியரும் நிற்பது அந்தக் காணொலியில் பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக முறையான விசாரணைகளை நடத்துமாறு அதிகாரிகளிடம் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்து தெரிவிக்கையில் –

இது போன்ற செயலை நான் ஏற்கவில்லை. மேலும், இந்த காலக்கட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் இதன் தாக்கம் பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இது குறித்து அனைத்து பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, மாணவர்களை உடல் ரீதியாகத் தண்டிக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது. அதனை மீறி இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செயலாகும்.

எனவே, கல்வி அதிகாரிகளால் இதுதொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# பெல்ஜியத்தின் இரண்டு விமானங்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் இணைவு

பெல்ஜியம் எயார்லைன்ஸின் இரண்டு விமானங்கள் குத்தகை அடிப்படையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் தற்போது சேவையில் இணைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் தற்போது நிலவும் விமானப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான இந்த நடவடிக்கை, பயணிகளுக்கான தரமான சேவையை உறுதிப்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் நிலவும் விமானப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண அந்த நிறுவனம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, பெல்ஜியம் எயார்லைன்ஸின் இரண்டு விமானங்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் தற்போது சேவையில் இணைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஃபிட்ஸ் ஏயாரின் ஏ – 320 ரக விமானமும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தால் தற்காலிகமாக குத்தகைக்கு எடுக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஏ-330-200 ஏர்பஸ் வகையைச் சேர்ந்த பெல்ஜியத்தின் விமானங்கள் பெல்ஜிய எயார்லைன் விமானிகளால் இயக்கப்படுகின்றன.

இந்த விமானங்களில் 22 வணிக வகுப்பு இருக்கைகளும், 240 பொருளாதார வகுப்பு இருக்கைகளும் உள்ளன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## விதைத்தவற்றை அறுக்கிறார்கள்

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' - இது தவிர்க்க முடியாத உலக நியதி.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்கள், பாதாள உலகக் குழுக்களின் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல் திணறும் தென்னிலங்கை - தினசரி பாதாள உலகக் குழுக்களின் அட்டகாசத்தை எதிர்கொள்ளும் சிக்கலில் இருக்கும் சிங்கள தேசம் - இதுவும் ஒரு வகையில் விதைக்கப்பட்ட வினைகளின் அறுவடைதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் பாதாள உலகக் குழுக்கள் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்கள் உருவாகுவதற்கான கள நிலைமை வடக்கு - கிழக்கில்தான் நீடிக்கிறது. ஆனால் அது இங்கு உருவாகவில்லை.

விடுதலைப் புலிகளின் காலத்தில் மற்றைய பல இயக்கங்கள் திடீர் திடீரெனத் தடை செய்யப்பட்டன. அவற்றில் ஆயுதப் பயிற்சி பெற்றிருந்த பல்லாயிரம் போராளிகள் திடீரென ஒரு கணத்தில் அவர்களின் இயக்கங்களில் இருந்து வெளியே விடப்பட்டனர். அந்த அமைப்புகளின் ஆயுதங்கள் கூட விடுதலைப் புலிகளினால் முழுமையாகக் கைப்பற்றப்பட்டன என்று கூற முடியாது.

அதேபோல புலிகள் இயக்கமும் 2009இல் முடிக்கப்பட்டது. அதன் போராளிகள் பல்லாயிரம் பேர் - பெரும்பாலும் கனரக ஆயுதங்கள் இயக்கும் தகைமையும் அனுபவமும் பெற்றவர்கள் - முறையாக இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் - திடீரென இயக்கக் கட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டு சமூகத்துக்குள் விடப்பட்டனர். வேறு தொழில் பயிற்சிகளோ, வாழ்வாதார வழி வகைகளோ இல்லாமல் சமூகத்தில் அந்தரிக்க விடப்பட்ட பல்லாயிரம் போராளிகள் தமது அன்றாட சீவியத்துக்கே அல்லாடும் நிலைமை இன்று வரை நீடிக்கின்றது.

புலிகளினால் சுவீகரிக்கப்பட்ட பெருமளவான ஆயுதங்கள் இன்னும் ஆங்காங்கே பதுக்கப்பட்டு கிடக்கின்றன. அவற்றை படையினர் இன்னும் முழுமையாக மீட்டுவிட்டனர் என்று கூற முடியாது.

இந்தப் பின்புல புற யதார்த்தங்களை நோக்கினால், பாதாள உலகக் குழுக்கள் தோன்றுவதற்கான வாய்ப்பான களநிலையும் சூழலும் ஏதுக்களும் வடக்குக் கிழக்கில்தான் தாராளமாக இருப்பது புலனாகும்.

ஆனால், அவை இங்கு உருவாகவில்லை. அதற்கு காரணம் நமது போராளிகளின் தெளிவு. அவர்கள் எந்த இயக்கத்திலும் இருந்திருக்கலாம். ஆனால் இன விடுதலைக்குத்தான் தாம் ஆயுதம் ஏந்தினோம், அதைத் தவறாகப் பயன்படுத்த முயற்சிக்கக்கூடாது என்ற கொள்கைத் தெளிவு - உறுதிப்பாடு - அவர்களுக்கு உறுதியாக இருக்கின்றது. அதனால் நம் மத்தியில் - வடக்கு, கிழக்கில் - பாதாள உலகக் குழுக்கள் போன்ற குற்ற கும்பல்கள் உருவாகவே இல்லை.

ஆனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்க என்றே படை திரட்டிய இலங்கை, அதே படையிலிருந்து வெளியேறிய விட்டோடிகளின் வலிமையில் நிற்கும் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்க முடியாது அல்லாடுகின்றது.

தமிழ்ப் போராளிகளை வேரோடழிக்க வேண்டும் என்று தென்னிலங்கை சுவீகரித்து வடக்கு - கிழக்குக்கு அனுப்பிய இயந்திரத் துப்பாக்கிகளும் ஆயுதங்களும் தான் இப்போது பாதாள உலக கும்பல்களின் கைகளில் தாண்டவமாடுகின்றன என்று உள்ளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதாள உலகக் குழுவினர் தங்கள் செயற்பாடுகளுக்கு படையினரை அல்லது படை விட்டோடிகளை வசமாகப் பயன்படுத்துகின்றனர் என்பதைப் பொலிஸ் பேச்சாளரில் இருந்து ஏனைய படைத்த தரப்பினர் வரை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்கின்றனர்.

பொலிஸிலும் படைகளிலும் பயிற்சி பெற்றவர்களைப் பாதாள உலகக் குழுக்கள் பெருந்தொகைப் பணத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்துகின்றன. பல சமயங்களில் பொலிஸ் மற்றும் படைத் தரப்பினரும் இந்தத் தாக்குதல்களில் பலியாகின்றனர். அதாவது தன் விரலை வைத்து தன் கண்ணை குத்தச் செய்யும் வஞ்சகச் செயலை இலங்கைப் பாதுகாப்பு தரப்பினர் இப்போது எதிர்கொள்கின்றனர்.

யுத்தக் குற்றங்கள், கொடூரங்கள், மனித குலத்துக்குப் பொருந்தாத காட்டுமிராண்டித்தனங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவற்றைத் தாராளமாக மேற்கொண்டு, அதன் மூலமே தமிழர்களின் போராட்டத்தை அழித்தொழித்த இலங்கைப் பொலிஸாலும், படைத்தரப்பாலும், தங்களின் பௌத்த - சிங்கள மக்கள் மத்தியில் ஊடுருவி இருக்கும் பாதாள உலகக் கும்பல்களை ஒழிக்க முடியாமல் இருப்பது வேடிக்கை அல்ல.

தமிழருக்கு செய்த அநியாயத்தை - அட்டூழியத்தை - தமது மக்கள் மத்தியில் வெளிப்படையாகச் செய்வது எப்படி என்பதுதான் அவர்களுக்கு உள்ள நெருக்கடி - இக்கட்டு - ஆகும்.

# மிகவும் துயரமாக அமைந்திருந்தது சிறப்பு முகாமில் சாந்தனின் வாழ்க்கை

## அவரது சட்டத்தரணி புகழேந்தி கவலை தெரிவிப்பு



முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனைப் பெற்று விடுதலை செய்யப்பட்ட நிலையில் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த சாந்தனின் வாழ்க்கை மிக துயரமானது என்று சாந்தனின் சட்டத்தரணி புகழேந்தி கவலை தெரிவித்துள்ளார்.

32 ஆண்டுகளை சிறையில் உடல் ஆரோக்கியத்துடன் கழித்த சாந்தனால் சிறப்பு முகாமில் ஒரு ஆண்டுக்கு மேலாக இருக்க முடியவில்லை. 120 சதுர அடி இடத்தில் அடைக்கப்பட்ட நிலையில் கடும் வேதனையில் நாள்களை சாந்தன் கழித்து வந்துள்ளார் என்று சட்டத்தரணி கண்ணீருடன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாய் நாட்டுக்குச் சென்று அம்மாவின் கையில் ஒருவேளை உணவு சாப்பிட வேண்டும் என்ற ஆசையில் இருந்தார் சாந்தன். அவரை இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவுக்காகக் கடவுச்சீட்டு பெறச் சென்ற போது சுயநினைவை இழந்து விட்டார்.

கடவுச்சீட்டு கிடைத்தவுடன் இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவைப் பெற்று டிக்கெட்டைப் பெற மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கிய நிலையில், 26 ஆம் திகதி அவர் சுயநினைவை இழந்து காணப்பட்டார்.

இந்த நிலையில் அவரின் உடல் மோசமானமையால் முருகனின் கட்டாயத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். உயிரை காப்பாற்றி அவரை ஊருக்கு அனுப்பிவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

இதன் பின்னர் தம்பியை பார்த்து மகிழ்ச்சியில் இருந்த அவரை 28 ஆம் திகதி இரவு இலங்கைக்கு அனுப்ப பணம் கட்டப்பட்டது. இந்த நிலையில் 27 ஆம் திகதி காலை உயிரிழந்துவிட்டார். அவரின் உயிரைக் காப்பாற்ற வைத்தியர்கள் எவ்வளவோ போராடியும் அவர் தாயின் கையால் ஒருவேளை உணவைக் கூட உண்ணாமல் இறந்துவிட்டார்.- என்றார்.

# தமிழகத்தில் பா.ஜ.க. யாரையும் நம்பி இல்லை மக்களவைத் தேர்தலில் அமோக வெற்றிபெறும்!

## இப்படித் தெரிவித்துள்ளார் நடிகை குஷ்பு



தமிழகத்தில் பா.ஜ.க. யாரையும் நம்பி இல்லை. மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெறும்.

இவ்வாறு நடிகை குஷ்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 'இந்து தமிழ் திசை' நாளிதழிடம் பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினரும் சினிமா நடிகையுமான குஷ்பு கூறியதாவது,

சிறிய கட்சி, பெரிய கட்சி என்பது முக்கியம் இல்லை. மக்களுக்கு சேவை செய்ய யார் தயாராக இருக்கிறார்கள் என்பது தான் முக்கியம். அமித் ஷா சொல்லியதுபோல கூட்டணி கதவுகள் எப்போதும் அ.தி.மு.கவுக்காக திறந்திருக்கிறது. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் கூட்டணியில் இணையலாம். பிரதமர் மோடி தமிழகத்துக்கு வரும் போதெல்லாம் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை பற்றி பெருமையாக பேசுகிறார். எனவே, பா.ஜ.க. கூட்டணிக்கு யார் வேண்டுமானாலும் வரலாம்.

அ.தி.மு.க., தி.மு.க. துணை இல்லாமல் ஒரு தேர்தலை யாவது திருமாவளவன் சந்தித்தது உண்டா, மற்றவர்களின் தயவில்தான் வி.சி.க. சவாரி செய்து கொண்டிருக்கிறது. ஆனால், பா.ஜ.க. யாரை நம்பியும் இல்லை.

மேற்கு வங்கத்தில் காங்கிரஸுக்கு ஆதரவு கிடையாது என்று மம்தா கூறிவிட்டார். ராகுல்காந்தி தொகுதி என்று தெரிந்தும் வயநாட்டில் கம்யூனிஸ்ட் வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். அப்படி என்றால் ராகுல் காந்தி எங்கே நிற்க போகிறார். பிரதமர் மோடிக்கு எதிராக அவர்கள் ஒரு முகத்தை காட்டட்டும். பிறகு ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா என்பதை பேசட்டும்.

அமித் ஷா, மோடி, நட்டா என்ன முடிவு செய்கிறார்களோ அதுதான் முக்கியம். என்னை தேர்தலில் போட்டியிட சொன்னால் நான் போட்டியிடுவேன். பிரச்சாரம் செய்யச் சொன்னால் செய்வேன். பா.ஜ.க. வெற்றி பெற வேண்டும் என்பதுதான் முக்கியம். மோடி மீண்டும் பிரதமராக பொறுப்பேற்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.- என்றார்.

# இன்று சென்னை வருகிறார் மோடி; 5 அடுக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள்!

பிரதமர் மோடியின் இன்றைய சென்னை வருகையை முன்னிட்டு சென்னை பெருநகர பொலிஸ் சார்பில் 15,000 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஆளுநர்களுடன் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் டிரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பொலிஸார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

பிரதமர் நரேந்திர மோடி இன்று சென்னை, நந்தனம், வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.

பிரதமரின் சென்னை வருகையை முன்னிட்டுச் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்வது குறித்து, சென்னை பெருநகர பொலிஸ் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், தலைமையில், கூடுதல் பொலிஸ்ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

பிரதமரின் நிகழ்ச்சி நடைபெறும் சென்னை, நந்தனம், வை.எம். சி.ஏ. மைதானம், சென்னை விமான நிலையம், மற்றும் சுற்றுப்புறங்களிலும், சென்னை செல்லும் வழித்தடங்களிலும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தீவிர சோதனைகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொண்டு வருகின்றன. –என்றுள்ளது.

# பாகிஸ்தான் பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் இரண்டாவது முறையாகவும் தெரிவானார்!


புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் கூட்டணி அரசை வழி நடத்த ஷெபாஸ் ஷெரீப் 2 ஆவது முறையாக நாட்டின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய பிரதமரைத் தெரிவு செய்வதற்கான தேசிய சட்டமன்றத்தில் நடைபெற்ற வாக்குப்பதிவில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆதரவுடன் ஷெபாஸ் ஷெரீப் 201 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 336 உறுப்பினர்களில் பிரதமராக 169 உறுப்பினர்கள் ஆதரவு போதும் என்ற நிலையில் ஷெபாஸ் 201 வாக்குகள் பெற்று தனிப் பெரும்பான்மை பெற்றுள்ளார்.

இம்ரான் கான் ஆதரவு பெற்ற ஒமர் ஆயுப் கான் 92 வாக்குகள் பெற்றார். முன்னதாக, ஷெரீப் முன்மொழிந்த அயாஸ் சாதிக், நாடாளுமன்ற சபாநாயகராக வெள்ளிக்கிழமைத் தெரிவு செய்யப்பட்டார். ஷெபாஸ் ஷெரீப், குடியரசுத் தலைவர் மாளிகையான ஐவான்-இ-சதரில் திங்கள்கிழமை பதவி ஏற்றுக்கொள்கிறார்.

எதிர்வரும் காலத்தில் 24 கோடி மக்கள் வாழும் தேசத்தில் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ள பிரச்சினைகளை ஷெபாஸ் ஷெரீப் எதிர்கொள்ள உள்ளார். ஷெபாஸ் ஷெரீபின் முதல் பதவி காலத்தில் பாகிஸ்தான் பொருளாதாரம்



விளிம்பு நிலையில் தத்தளித்தது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் கடைசி நிமிடத்தில் தவிர்க்கப்பட்டது.

கடுமையான பணவீக்கத்துடன் நாடு தொடர்ந்து போராடி வரும் நிலையில், மீண்டும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஷெபாஸ் ஷெரீப் அரசு முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூடுதலாக பாதுகாப்பு அச்சுறுத்தலும் அதிகரித்து வருகிறது. 2021 இல் ஆப்கானிஸ்தானில் தாலிபன்கள் ஆட்சி பதவி ஏற்றதில் இருந்து பாகிஸ்தான் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனில் ஒல்லியாக இருந்தவர் சாரதி உரிமத்தை இழந்துள்ளார்!




பிரிட்டனில் வசிக்கும் 34 வயதாகும் ஜோ ரோஜர்ஸ் என்பவர் ஒல்லியாக இருந்த காரணத்தால் சாரதி உரிமத்தை இழந்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அவர் மிகவும் ஒல்லியாக இருந்தார். அதனால் அவர் வாகனம் செலுத்தத் தகுதியற்றவர் என்று அறிவிக்கப்பட்டே அவரது உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

13 வயதிலில் இருந்தே அவருக்கு அனோரெக்ஸியா என்ற உணவுக் கோளாறு உள்ளது.

இதனால் உடல் எடை கூடிவிடுமோ என்ற பயம் அவருக்கு எப்போதும் இருந்தது. இதனால் அவரும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டார்.

இதன் விளைவாக போக்குவரத்துத் துறை அவரை வாகனம் செலுத்தத் தகுதியற்றவர் என்று அறிவித்தது.

முதலில் உடல்நிலையை மேம்படுத்தி, அதன்பிறகு சாரதி உரிமம் பெற வேண்டும் என, கண்டிப்பான அறிவுறுத்தல்களை வழங்கபட்டுள்ளது. இல்லாவிட்டால் அவரால் வாழ்க்கையில் வாகனம் செலுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ. கலிபோர்னியா,நெவாடாவை தாக்கியுள்ளது சக்திமிக்க பனிப்புயல்!



அமெரிக்காவின் கலிபோர்னியா மற்றும் நெவாடாவை, இந்தக் காலநிலையில் மிகப் பெரிதாகக் கருதப்படும் மிக சக்திவாய்ந்த பனிப்புயல் தாக்கியுள்ளது.

100 மைல் வேகத்தில் வீசும் பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக ஆயிரக் கணக்கான மக்கள் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கினர்.

பல இடங்களில் 10 அடி உயரத்துக்கு பனி கொட்டிக்கிடக்கிறது. 80 மாநிலங்களுக்கு இடையேயான நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வரை சியரா நெவாடாவுக்குப் பனிப்புயல் எச்சரிக்கை விடப்பட்டது. அங்கு ஒரு மணி நேரத்துக்கு மூன்று அங்குலத்துக்கும் அதிகமான பனிப்பொழிவு எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகுதியில் பனி மொத்தமாக 5 முதல் 12 அடிவரை இருக்கும், 5,000 அடிக்கு மேல் உயரத்தில் அதிக அளவு பனி குவியும். கனமழையால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் என்று தேசிய வானிலை சேவை ஆய்வாளர் வில்லியம் சர்ச்சில் தெரிவித்துள்ளார்.



# இலங்கை - மாலைதீவு இடையில் விரிவுபடுத்தப்படும் விமான சேவை

இலங்கைக்கும், மாலைதீவுக்கும் இடையிலான விமான சேவைகள் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விரிவாக்கப்பட்ட விமான சேவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, மாலைதீவு மற்றும் கொழும்புக்கு இடையில் வாராந்தம் ஒவ்வொரு வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் இரண்டு விமானங்கள் இயங்கவுள்ளன.

இந்த மூலோபாய விரிவாக்கம் மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையிலான கலாசார மற்றும் பொருளாதார பரிமாற்றத்தை மேம்படுத்த உதவுவது மாத்திரமல்லாது பொருளாதார வளர்ச்சிக்கு உந்துகோலாக அமையும் என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக மாலைதீவின் முகாமைத்துவப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவையை விரிவாக்கும் முயற்சி இரு நாடுகளுக்கும் வணிக ரீதியிலான முன்னேற்றங்களை பெற உதவும் என்று கூறியிருந்தார்.

இந்த விமான சேவை விரிவாக்கத்துக்கு மாலைதீவின் பொது விற்பனை முகவராக இலங்கையைச் சேர்ந்த நவலோகா ஏயார் சேவிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் செயற்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, விமானச் சீட்டுக்களை முன்பதிவு செய்யக் கூடிய முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இணையத்தளம் வாயிலாகவும் கையடக்கத்தொலைபேசி செயலிகள் மூலமாகவும் பயணச் சீட்டுக்களை முன்பதிவு செய்ய முடியும்.

இந்த விமான சேவைகளின் வாயிலாக இலங்கை மீண்டும் தனது சுற்றுலாத் துறையை மீட்டெடுத்து வளர்ச்சிக்கான வாய்ப்பாக அமையும் என்றும் இரு நாடுகளின் சுற்றுலாத்துறையிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டள்ளது.

# காலிச் சிறையில் மூளைக் காய்ச்சல் மூன்றாவது நபரும் ஆஸ்பத்திரியில்

காலி சிறைச்சாலையில் மீண்டும் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கைதி ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் தற்போது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை. மூளைக் காய்ச்சல் நோயாளிகள் வேறு எவரும் சிறைச்சாலையில் அடையாளம் காணப்படவில்லை என்று சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் காலி சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பல சம்பவங்கள் பதிவாகிய நிலையில், இரண்டு நோயாளிகள் உயிரிழந்திருந்தனர்.

இதேவேளை இந்த நோயைக் கட்டுப்படுத்த சிறைச்சாலை சுகாதார பிரிவால் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .



# ‘சொக்லேட்’ உறைகளில் பொதியிடப்பட்டு கடத்தப்பட்டுள்ள ஐஸ் போதைப் பொருள்!

## கண்டுபிடித்துள்ளது விசேட அதிரடிப்படை

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நீண்ட காலமாக நாட்டுக்குள் ஐஸ் போதைப் பொருளை ‘சொக்லேட்’ உறைகளில் மறைத்து வைத்துக் கடத்தியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே, இந்தக் கடத்தல் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிரிபத்கொட பகுதியில் சொகுசு காரொன்றை சோதனையிட்ட போது, ‘சொக்லேட்’ உறைகளில் பொதி செய்யப்பட்ட சுமார் ஐந்து கிலோ ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டள்ளது என்று அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, கடத்தல்காரர் ஒருவருக்குச் சொந்தமான வத்தளை மற்றும் கணேமுல ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகள் தொடர்பிலான தகவல்களும் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்துள்ளன.

தற்போது டுபாயில் பதுங்கியிருக்கும் போதைப் பொருள் வியாபாரிகளான நிபுன மற்றும் நந்தசேன ஆகியோரின் அறிவுறுத்தலிலேயே, இவ்வாறு போதைப் பொருள் கடத்தப்பட்டுள்ளது என்று அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# சாதாரணதர பரீட்சைக்கான பாடங்கள் ஏழாகக் குறையும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தகவல்

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கையை ஏழாகக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மீதமுள்ள மூன்று பாடங்கள் உள்நாட்டில் மாணவர்களுக்கு வழங்கக்கூடிய தொழில் மற்றும் சுற்றுச்சூழல் அறிவை மதிப்பிடும் வகையில் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் மாணவர்கள் தோல்விடையவது குறையும் என எதிர்




பார்க்கப்படுகின்றது.

மேலும், குழந்தைகளின் விருப்பங்களையும் திறன்களையும் வெளிப்படுத்தும் பாடப் பிரிவுகளில் தொழில்முறைப் பயிற்சி பெறுவதற்குத் தேவையான பின்னணியைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 3,37,000 மாணவர்களில் 50,000 மாணவர்களுக்கு ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வழிகாட்டல் பயிற்சி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த பயிற்சி நிகழ்ச்சி நாளை முதல் நாடளாவிய ரீதியில் 300 மையங்களில் நடைபெறும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தகவல் தொழிநுட்பம் பாடத்துடன் செயற்கை நுண்ணறிவை கற்பதற்கான வாய்ப்பு தரம் 08க்கு மேல் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இலங்கையில் வெப்ப நிலை இன்று தீவிரமடையக்கூடும்!

## எதிர்வு கூறுகிறது வளிமண்டலவியல் திணைக்களம்

இலங்கையின் பல பிரதேசங்களில் இன்று வெப்ப நிலை தீவிரமடையக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, வடமேற்கு, மேற்கு மற்றும் தெற்கு, சப்ரகமுவ மாகாணங்கள் மற்றும் அனுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் சில இடங்களில் மனித உடலால் உணரப்படும் வெப்பம் கவனத்துக்கு உரிய அளவில் இருக்கும் என்று அந்தத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் நிலவும்



வெப்பமான காலநிலை எதிர்வரும் மே மாதம் வரையில் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியிருந்தது.

இதற்கமைய, நாளுக்கு நாள் தீவிரமடைந்துவரும் வெப்ப நிலை இன்று மேலும் அதிகரிக்கக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, போதுமான அளவு தண்ணீர் குடிப்பது, முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுப்பது, கடுமையான வெளிப்புறச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவது போன்ற சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# லஞ்ச ஊழல் வழக்கை வீரவன்ஸ எதிர்கொள்ளத் தயாராகின்றாராம்

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தமக்கு எதிராக நிலுவையில் உள்ள லஞ்ச ஊழல் வழக்கிற்காகத் தாம் நீதிமன்றத்தில்முன்னிலையாகவுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பாதுக்க பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரும், நாடாளு மன்ற உறுப்பினருமான விமல் வீர வன்ஸ 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையில் ஆட்சியில் இருந்தபோது தாம் சுவீகரித்த 75 மில்லியன் ரூபா சொத்து மதிப் புத் தொடர்பில் குறிப்பிட மறுத்துள் ளார்.

இதனை தொடர்ந்து, கடந்த நல் லாட்சி காலத்தில் விமல் வீரவன்ஸ வுக்கு லஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் கடந்த வெள் ளிக்கிழமை விசாரணைக்கு அழைக் கப்பட்டது.

விமல் வீரவன்ஸ தரப்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மருத்துவ அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்ப் பித்திருந்தார்.



கடந்த சில நாள்களாக காய்ச்சல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் விமல் வீரவன்ஸ பாதிக்கப்பட்டு இருக்கிறார் எனவும், ஏழு நாள்கள் ஓய்வில் இருக்குமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியிருக்கின்றனர் எனவும் அந்த மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் விமல் வீர வன்ஸ பல்வேறு சுகயீன காரணங்களை காட்டி மன்றில் முன்னிலையாகத் தவறுகின்றார் என ஏற்கனவே லஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று நீதிமன்றில் அழைக் கப்பட்ட போதும், சந்தேகநபர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இதனால், விசாரணைகளை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அயேஷா ஜினசேன தெரிவித்தார்.

சந்தேகநபர் காலம் தாழ்த்தாது உடனடியாக தகுந்த மருத்துவரைச் சந்தித்து சிகிச்சை பெறுவது சிறந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பின்னர் விசாரணைகளை நிறைவு செய்வதற்கான திகதியை நிர் ணயம் செய்யுமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் பரிசீலித்த நீதிபதி நவரத்ன மாரசிங்க வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் அழைக்க உத்தரவிட்டார்.

அன்றைய தினத்தில் குற்றம் சாட்டப் பட்ட நபர் நிச்சயம் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமெனவும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் பாதுக்க பிரதேசத்தில் ஊடகவியலாளர் கள் அவரின் சுகயீனம் குறித்து கேள்வி களை கேட்ட போது, அதற்கு பதிலளிக் கும் விதமாக, அவர் தற்போது தாம் குணமடைந்து வருகிறார் எனத் தெரிவித்தார்.



# நாய் குறுக்கே பாய்ந்ததால் விபத்து பெண் உயிரிழப்பு; கணவன் காயம்!

மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியில் நாவலடி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் குடும்பபெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. அவருடன் பயணம் செய்த கணவர் பலத்த காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியில் கல்வி கற்கும் தனது மகளைப் பார்வையிட்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பு பிரதான வீதியில் நாவல டியில் மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்கே நாய் பாய்ந்தமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் 53 வயதுடைய அப்துல் ஹமீத் ஜமீலா என்பவர் உயிரி ழந்துள்ளதுள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலத்தை உற வினர்களிடம் கையளிக்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# கிண்ணியாவில் 10 வருடங்கள் நீடித்த காணிப் பிரச்சினைக்கு நேற்றுத் தீர்வு!

கிண்ணியா – சூரங்கல் பொது விளையாட்டு மைதானக் காணி உரிய முறையில் அடையாளம் காணப்பட்டு பொது மக்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இந்த மைதானக் காணியைப் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு நேற்று அனுமதி கிடைத்துள்ளது.

கிண்ணியா – சூரங்கல் பொதுவிளையாட்டு மைதானத்துக்கான காணிப் பிரச்சினை சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக நீண்ட இழுபறியில் இருந்தது.

அண்மையில் அந்த மைதானத்துக்கு விஜயம் செய்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அது தொடர்பாக ஆராய்ந்து பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கையை எடுத்திருந்தார்.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் பொது மக்களுடன் கலந்துரையாடி சுமூகமாக பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கணவனின் கழுத்தை அறுத்து கொலை செய்துள்ள மனைவி!

## கத்தியுடன் பொலிஸாரால் கைது!!

காலி, கரந்தெனிய பிரதேசத்தில் கணவன் – மனைவிக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் மனைவி, கணவனின் கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருபாபில பிரதேசத்தில் நேற்று அதிகாலை இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது.

நுவன் குமார என்ற 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



மனைவி தனது கணவரின் கழுத்துப் பகுதியில் கத்தியால் தாக்கியதாகவும், தாக்குதலுக்குள்ளானவர் வீட்டில் இருந்து வெளியே வந்து வீட்டருகே இறந்து கிடந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்கு பயன் படுத்திய கத்தியுடன் மனைவி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தம்பதியினருக்கு இடையில் அடிக்கடி ஏற்பட்ட தகராறு தொடர்பில் கரந்தெனிய பொலிஸாருக்கும் பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# 'எட்கா' ஒப்பந்தம் கைச்சாத்தானால் இந்தியாவின் மாநிலமாகும் இலங்கை

## எச்சரிக்கின்றார் விமல் வீரவன்ஸ

பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது. எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கையில் இந்தியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பிரஜைகள் சொந்த நாட்டுக்குள் இரண்டாம் தரப்பினராக அடையாளப்படுத்தப்படுவார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பாதுக்க வேரகல பகுதியில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டுக்கு என்ன நேர்ந்துள்ளது? மக்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள். வாழும் சூழல் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார மற்றும் சமூகப் பாதிப்பை அரசாங்கம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. இந்தியாவின் செல்வந்தரான அதானிக்கு இலங்கையின் பெரும்பாலான வளங்களை வழங்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.



மன்னார் காற்றாலை மின் உற்பத்தியின் பங்குகளை அதானி நிறுவனத்துக்கு வழங்குவதால் நடுத்தர மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் டெலிகொம் நிறுவனத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதே போல் இலங்கை மின்சாரத்தை பல கூறுகளாக பிரித்து அதனையும் இந்தியாவுக்கு வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதார கேந்திர மையங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்கும் செயற்பாடுகளினால் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படும். இவ்வாறான நிலையில் இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எட்காஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டால் இந்தியர்கள் இலங்கையில் சுதந்திரமாக தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் சொந்த நாட்டுக்குள் இரண்டாம் தர பிரஜைகளாக கருதப்படுவார்கள். இலங்கை இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக மாற்றமடையும்.

நாட்டின் தேசிய வளங்களை இந்தியாவுக்கு வழங்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் குறித்து எதிர்க்கட்சிகள் ஏதும் பேசுவதில்லை. அனைவரும் இந்தியாவுக்கு துதி பாடிக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு நாட்டின் சுயாதீனத்தை இந்தியாவிடம் விட்டுக் கொடுக்கும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருக்கு ஆதரவாக செயற்படும் ராஜபக்ஷக்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காக மக்களை தெளிவுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு இடமளித்துக் கொண்டு இருக்க முடியாது. - என்றார்.



# களுகங்கையில் இருந்து மீட்கப்பட்ட இனந்தெரியாத பெண்ணின் சடலம்!

களுகங்கையில் இருந்து இனந்தெரியாத பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று தெற்கு களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் களுத்துறை நகரை அண்மித்த பகுதிகளில் பல சந்தர்ப்பங்களில் வசித்து வந்துள்ளார் என்று பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணுக்கு சுமார் 50 வயது இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெற்குக் களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சர்வதேசக் கடல் பாதுகாப்புக்கு இரண்டாவது முறையாகக் கப்பல்

## கப்டன் தயான் விக்கிரமசூரிய தகவல்

சர்வதேசக் கடற்பரப்பில் கடல் பாதுகாப்பைப் பேணுவதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக இலங்கைக் கடற்படை இரண்டாவது முறையாக கடற்படைக் கப்பலை அனுப்பவுள்ளது என்று கடற்படை ஊடகப் பணிப்பாளர், கப்டன் தயான் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு உளவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது கப்பல் இரண்டு நாள்களுக்கு முன்னர் தனது பணியை முடித்துக் கொண்டு இலங்கைக்குத் திரும்பியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வணிகர்கள் மற்றும் கடற்றொழில் கப்பல்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், இந்திய பெருங்கடல் பகுதியில் போதைப் பொருள் கடத்தலை தடுப்பதற்கும் 100 பேர் கொண்ட பணியாளர்களுடன் கடற்படை எஸ்.எம்.எஸ் கஜபாவை இலங்கை அனுப்பியது.

அரேபிய கடல் கடற்கொள்ளைக்கு பெயர் பெற்றது என்று சுட்டிக்காட்டிய அவர், வணிகர்கள் மற்றும் கடற்றொழில் கப்பல்கல் சுதந்திரமாகச் செல்ல, அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் அனுப்பப்பட்டு வருகின்றன என்றும் கப்டன் தயான் விக்கிரமசூரிய கூறியுள்ளார்.

இந்த நிலையில் சர்வதேச பாதுகாப்பு நடவடிக்கைக்காக இரண்டாவது கப்பலை அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அனுப்பப்படவுள்ள திகதி போன்ற கூடுதல் விவரங்களை வெளியிட முடியவில்லை என்றும் கப்டன் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை செங்கடல் பாதுகாப்பிலும் இலங்கையின் கப்பல்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 2023 இல் அதிக இலாபம் ஈட்டியுள்ள மின்சார சபை!

இலங்கை மின்சார சபை 2023 ஆம் ஆண்டு அதிக இலாபத்தை அடைந்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

2023 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று கணக்காய்வு அறிக்கையின்படி 61.2 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சார சபை இலாபமாகப் பெற்றுள்ளது.

ஏனைய முதலீடுகளையும் சேர்த்து 75.7 பில்லியன் ரூபாவை சபை இலாபமாக பெற்றுள்ளது. இதில் கடந்த ஒக்ரோபர் முதல் 18 வீத கட்டண அதிகரிப்பால் 21 பில்லியன் ரூபா இலாபமாகக் கிடைத்துள்ளது.

பெரும்பாலும் கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதல் டிசெம்பர் வரையிலேயே அதிக இலாபம் கிடைத்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



செப்ரெம்பர் மாதம் முதல் நாடு முழுவதும் பெய்த மழையால் இவ்வாறான வருமானம் சாத்தியமாகியுள்ளது என்று தொழில் துறை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் எண்ணெய் மற்றும் நிலக்கரி அடிப்படையிலான உற்பத்தியை வியத்தகு முறையில் மின்சாரசபையால் குறைக்க முடிந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் – டிசெம்பர் மாதங்களில் அதிக மழைப் பொழிவு பொதுவாகப் பெறப்படும். எனினும் கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதல் டிசெம்பர்வரை சராசரிக்கும் அதிகமான மழை பெய்தது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.03.2024




இன்று உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையிலும் திட்டங்களிலும் பொறுமை தேவை. இறை வழிபாட்டின் மூலம் மன அமைதி பெறலாம்.

உங்கள பணிகளை திறமையாக மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

பொறுமையுடன் இருந்து உங்கள் துணையின் அன்பைப் பெறுங்கள். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்கவும் அது உறவை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

ஒவ்வாமை பாதிப்பு ஏற்படலாம். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று உங்கள் பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். நம்பிக்கையுடன் இருங்கள். கண்டிப்பாக நல்லதே நடக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பணியாற்ற வேண்டும். இதன் மூலம் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்ற இயலும்.

சில பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்குக் கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கப் பெறலாம்.

உங்கள் நேர்மையான அனுகுமுறை மற்றும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அதனால் சுதந்திரமான நிதிநிலை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள். உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று அதிர்ஷ்டகரமான நாள். உங்கள் செயல்களில் வெற்றி கிடைக்கும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனளிக்கும்.பணியில் உங்கள் செயல் திறனில் வெற்றி பெறுவீர்கள். பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று கடின உழைப்பு வெற்றியை பெற்றுத் தரும். ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை பெற்றுத் தரும்.

இன்று உங்களிடம் உறுதியான மனநிலை காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்க உதவும்.




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். நல்ல பலன் காண நம்பிக்கையுடன் இருங்கள். நீங்கள் கடினமாக உழைத்த போதிலும் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணியிடச் சூழல் கடினமானதாக இருக்கும்.

உங்களின் மாறுபடும் மனநிலை காரணமாக எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியாக இருக்க உணர்சிவசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

இன்று கணிசமான தொகை சம்பாதிப்பதற்கு குறைந்த வாய்ப்பே உள்ளது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு அதிர்ஷ்டம் காணப்படாது.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது. நற்பலன்கள் தாமதமாக கிடைக்கும். இன்று அதிகம் எதிர்பார்க்க வேண்டாம். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் பதற்றம் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இத்தகைய மனநிலையை தவிர்ப்பது நல்லது. அமைதியை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் விலை மதிப்பு மிக்க பொருள்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளவும். அவற்றை இழக்க வாய்ப்பு உள்ளது. மேலும் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்திறன் கண்டு சகபணியாளர்கள் பொறாமைப்படுவார்கள். உங்கள் செயல்திறனை மேம்படுத்த புதிய யுக்திகளை கையாள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் துணையிடம் சமநிலையோடு பழகுவீர்கள். உங்கள் பிரியமானவரும் உங்களுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வார்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும் உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலும்.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்காது. இன்று நற்பலன்கள் காண சமநிலையான அணுகு முறையோடு சூழ்நிலையைக் கையாள வேண்டும்.

பணியில் கவனச் சிதறல் ஏற்படாத வகையில் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் பணிகளைத் திறம்பட ஆற்ற பிறரின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தேவையற்ற பதற்றம் காரணமாக அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையிடம் தவறு கண்டுபிடிப்பீர்கள்.

இன்று மிதமான பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு குறைவு.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் உணவு வகைகளை தவிர்க்கவும்

# இன்றைய ராசி பலன்கள் - 04.03.2024

## தனுசு

இன்று உங்களுக்கு அதிக பொறுமை தேவை. நல்ல வாய்ப்புகள் தவறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உறுதியான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக் காது. பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள நீங்கள் இருவரும் அனுசரித்து நடந்து கொள்ள வேண் டும். இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது இழப்பு ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும். எனவே எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்தது.

## கும்பம்

இன்று உங்கள் அனைத்து முயற் சிகளிலும் வெற்றி கிடைக்கும். தன்னம் பிக்கையுடன் வாழ்வில் முன்னேறுவீர் கள். வெற்றி பெறுவதற்கான ஆற்றல் மற்றும் உறுதி உங்களிடம் காணப்படும்.

நீங்கள் பணியிடத்தில் துடிப்புடன் செயல்படுவீர்கள். உங்கள் திறமையின் மூலம் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்சிகரமான உறவை அனுபவிப்பீர்கள். இருவரிடையே உறவில் நல்ல பிணைப்புக் காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். வெற்றி காண்பதற்குத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். பதற்றப்படாமல் செயல்களை மேற் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது தவறுகள் ஏற்படலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுவது சிறந்தது.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்ள முயலுங்கள். இல்லையெனில் தேவையற்ற குழப்பம் சூழ்நிலையை பாதிக்கும்.

இன்று அதிக பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. என்றாலும் சிறிய அளவில் கண்கள் மற்றும் பற்களில் பிரச்சினை ஏற்படலாம்.

## மீனம்

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படு வீர்கள். இன்றைய நாளை ஆக்க பூர்வ மான நோக்கத்துக்குப் பயன்படுத்துவதன் மூலம் பலன்கள் சாதகமாக இருக்கும். இன்று சௌகரியங்கள் அதிகரித்துக் காணப்படும்.

நீங்கள் திறமையுடன் பணியாற்றி வெற்றி பெறுவீர்கள். உங்கள் தனித்திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மிகவும் மகிழ்விக்கும். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள்.

சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திடமான ஆரோக்கியம் காணப்படும்.

